சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண். 9726 /ஆ2/2023 நாள். 22.12.2023

பொருள்: பள்ளிக் கல்வி – சென்னை மாவட்டம்- அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வருடாந்திர தென்னிந்திய அறிவியல் கண்காட்சி (SISF) 2024 மாவட்ட அளவில் 03.01.2024 அன்று நடைபெறுதல் - கண்காட்சியில் பங்கு பெற கோருதல் - சார்பு.

பார்வை: சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.45451/எம்/இ2/2023, நாள்.14.12.2023.

.....

பார்வையில் காண் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுங்கிணங்க, சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து வகையான உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மற்றும் ஆசிரியர்களுக்கு வருடாந்திர தென்னிந்திய அறிவியல் கண்காட்சி (SISF) 2024 சார்ந்து 03.01.2024 அன்று சென்னை வருவாய் மாவட்ட அளவில் அறிவியல் கருத்தரங்கு சென்னை-8, எழும்பூர், மாநில அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் நடைபெறவுள்ளது.

தென்னிந்திய அறிவியல் கண்காட்சி 2024க்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள 3 வெவ்வேறு வகைகளில் நடைபெற உள்ளது.

1. தனிப்பட்ட வகை (ஒரு மாணவர் + ஒரு ஆசிரியர்) = 15 கண்காட்சிகள்
2. குழுவகை (2 மாணவர்கள் + ஒரு ஆசிரியர் ) = 10 கண்காட்சிகள்
3. ஆசிரியர் வகை (ஒரு ஆசிரியர் மட்டும்) = 10 கண்காட்சிகள் .

இக்கண்காட்சியானது பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒன்றில் இருக்க வேண்டும். இயற்பியல், வேதியியல்,கணிதம், பூமி மற்றும் விண்வெளி அறிவியல், சுற்றுச்சூழல் அறிவியல் , பொறியியல், உயிரியல் / உயிர் வேதியியல் மற்றும் கணினி அறிவியல். மேலும் 8 முதல் 10 வகுப்பு முடிய படிக்கும் மாணவர்கள் மட்டுமே பங்கேற்க தகுதியுடையவர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு வகைக்கு பள்ளிக்கு ஒரு

படைப்பு வீதம், மாணவர்கள் வகைக்கு இரு படைப்புகளும் மற்றும் ஆசிரியர் வகைக்கு ஒரு படைப்பு மட்டுமே அனுமதிக்கப்படும்.

மேற்கண்ட நெறிமுறைகள் மற்றும் விதிகளின்படி மாவட்ட அளவிலான கண்காட்சி 03.01.2024 அன்று கீழ்க்கண்டவாறு நடைபெறவுள்ளதில் தங்கள் பள்ளி 8 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களின் படைப்புகளுடன் பங்குபெற உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | நடைபெறும் இடம் | நாள் மற்றும் நேரம் |
|---|---|---|
| 1. | மாநில அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி, எழும்பூர், சென்னை-08. | 03.01.2024 (புதன் கிழமை) காலை 10.00 மணி முதல் மாலை 5 மணி வரை |

மேலும் இக்கண்காட்சியில் வெற்றி பெற்றவர்களில் முதலிடம் மற்றும் இரண்டாம் இடம் பெற்றவர்கள் 06.01.2024 **அன்று கடலூர் மாவட்டத்தில்** மாநில அளவில் நடைபெறவிருக்கும் கண்காட்சியில் பங்கேற்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு. பார்வையில் காண் செயல்முறை நகல்

22.12

முதன்மைக்கல்வி அலுவலர்

22/12/2023 சென்னை.

பெறுநர்

அனைத்து வகை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,

சென்னை மாவட்டம்.

நகல்

அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்

15/12/23
1-12 pm

009726

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை –6

ந.க.எண். 45451/எம்/இ3/2023, நாள். .12.2023

அ(2)

பொருள் : பள்ளிக் கல்வி - அனைத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வருடாந்திர தென்னிந்திய அறிவியல் கண்காட்சி (SISF) - 2024 மாவட்ட/மாநில அளவில் நடத்துதல் - சார்பு.

பார்வை: Visvesvaraya Industial and Technological Museum Letter No.VA24(24)/EDTEXT/SISF-2024/412, Dated.22.08.2023

19 DEC 20

பார்வையில் காணும் கடிதத்தின்படி தென்னிந்திய அறிவியல் கண்காட்சி என்பது அனைத்து உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளிகளில் 8-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கான வருடாந்திர நிகழ்வாகும். அனைத்து 6 தென் மாநிலங்களும் பல்வேறு அறிவியல் கருப்பொருள்களில் கண்காட்சிகளுடன் பங்கேற்கின்றன. பங்கேற்றவர்கள் அந்தந்த மாநில அரசுகளால் நடத்தப்படும் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சிகளில் வெற்றிப்பெற்றவர்களாவர். SISF அருங்காட்சியகத்தால் ஒருங்கிணைக்கப்பட்டு 6 தென் மாநிலங்களையும் ஒருங்கிணைத்து கண்காட்சியில் பங்கேற்கின்றனர். இம்மண்டல நிகழ்வு 1981-1982 முதல் ஒவ்வொரு ஆண்டும் ஏற்பாடு செய்யப்பட்டு சுழற்சி அடிப்படையில் நடத்தப்படுகின்றது. இந்த ஆண்டு SCERT ஆந்திரப்பிரதேசம் SISF -2024-யை ஜனவரி -2024 மூன்றாவது வாரத்தில் நடத்திட ஒப்புக்கொண்டுள்ளது. சரியான இடம் மற்றும் அட்டவணை சரியான நேரத்தில் தெரிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்திய அறிவியல் கண்காட்சி 2024 -க்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள 3 வெவ்வேறு வகைகளில் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சிகளில் இருந்து அதிகபட்சம் (35) முப்பத்தைந்து கண்காட்சிகள் தேர்தெடுக்கவும், 8 முதல் 10 வகுப்பு முடிய படிக்கும் மாணவர்கள் மட்டுமே பங்கேற்க தகுதியுடையவர்கள் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

1. தனிப்பட்ட வகை (ஒரு மாணவர் + ஒரு ஆசிரியர் ) =15 கண்காட்சிகள்.

2. குழுவகை ( 2 மாணவர்கள் + ஒரு ஆசிரியர்) =10 கண்காட்சிகள்.

3. ஆசிரியர் வகை (ஒரு ஆசிரியர் மட்டும்)=10 கண்காட்சிகள். இக்கண்காட்சியானது பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒன்றில் இருக்க வேண்டும். இயற்பியல், வேதியியல்,

கணிதம், பூமி மற்றும் விண்வெளி அறிவியல், சுற்றுச்சூழல் அறிவியல், பொறியியல், உயிரியியல்/உயிர்வேதியியல் மற்றும் கணினி அறிவியல்.

மேற்கண்ட விதிகளின்படி மாவட்ட அளவில் 27.12.2023 அன்று கண்காட்சி நடத்தி வெற்றிப்பெற்றவர்களில் முதலிடம் மற்றும் இரண்டாம் இடம் பெற்றவர்கள் மட்டும் மாநில அளவில் நடைபெறவிருக்கும் கண்காட்சியில் பங்கேற்க தெரிவிக்கப்படுகிறது மாநில அளவிலான கண்காட்சி 06.01.2024 அன்று நடத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இயக்குநர்

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்

நகல்

மாநில திட்ட இயக்குநர்

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி

மாநில திட்ட இயக்ககம்

சென்னை –6